சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **383 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **07.03.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சையது இப்ராகிம் | கிராமம : | |
| த/பெ: | ஜியாவுதீன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1.ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.14 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால்சரிதான். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்து சமபந்தமாக நான் தான் காவல் துறையில் புகார்க்கொடுத்தேன். விபத்து சமயத்தில் இறந்துபோன நபரின் பின்னால் நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தேன்.எனக்கும் இறந்துபோன நபருக்கும் இடையே சுமார் 50 அடி தூரம் இருந்தது. விபத்து நடந்த சாலை கிழமேல் சாலையாகும். விபத்து சமயத்தில் இறந்துபோன நபர் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தார் அப்போது எதிரில் வந்த டாடா ஏஸ் வாகனம் திடீரென வலதுபக்கம் வந்து இறந்துபோன நபரின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. டாடா ஏஸ் வாகனம் வேகமாக வந்தால் என் மீது மோதி இருக்கும் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவரது குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத விபத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. இறந்துபோன நபர் எனக்கு

தெரிந்த நபர் என்பதால் அவர் மீது உள்ள தவறை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/– சையது இப்ராகிம்

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
Date: 2024.03.11 18:00:49 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.